# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 13.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 12398/SCIC/2024**

திரு.R.ராஜு, - மேல்முறையீட்டாளர்
எண்.3/57, மெயின் லேன் தெரு
போலீஸ் கமிஷனர் காலனி
பொழிச்சலூர், சென்னை -600 074
Cell :85259 90563.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம்
(இ) சிட்லபாக்கம் - 600 064
தாம்பரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **25.06.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 05.08.2024 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.08.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 23.09.2024 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பதில் | 15.09.2025 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 15.10.2025 |

1. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 25/06/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அதிகாரி, புனித தோமையார் மலை பஞ்சாயத்து, சிட்லபாக்கம், சென்னை-64 அவர்களுக்கு அனுப்பி, அதில் “பொருள்- சர்வே எண்.216/4-6

பொழிச்சலூர் - தொடர்பாக - தனது வீட்டின் முன்புள்ள ஆக்கிரமிப்பு எப்போது பஞ்சாயத்து நிர்வாகம் மூலம் அகற்றப்படும் ? ” எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.R.ராஜு, அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.வெ.சுதர்சன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் அவர்கள் நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு 09/08/2024 மற்றும் 15/09/2025 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக பதில்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், 15/10/2025 தேதியிட்டு தனது ஆட்சேபனை மனுவினை அனுப்பியுள்ளார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரர், குறை தீர் கோரிக்கை மனுவினை அனுப்பி, ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், தனது வீட்டிற்கு முன்னால் உள்ள, சாலையில் சட்ட விதிகளை மீறி நான்கு கழிவு நீர் தொட்டியும், ரேம்ப், சுற்று சுவருக்கு வெளியே அத்துமீறி பூங்கா அமைக்க சுவர் எழுப்பியுள்ளது, தனது வீட்டிற்கு முன்பாக சாக்கடை நீர் ஓடுவது உள்ளிட்ட சில பிரச்சினைகளை குறிப்பிட்டு அவற்றினை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தை அளிக்கக் கோரியுள்ளார் எனத் தெரிய வருகிறது. இம்மனுவின் மீது இது நாள் வரை எவ்வித விசாரணையோ, நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனினும் ஏற்கனவே மேற்சொன்னவாறு 09/08/2024 மற்றும் 15/09/2025 தேதியிட்டு பதில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இன்றைய விசாரணையின் போது மனுதாரர், 13/07/2026 தேதியிட்ட தனது எழுத்துப்பூர்வமான குறை தீர் மனுவினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் அவர்கள், மனுதாரரின் 13/07/2026 தேதியிட்ட மனுவின் மீது ஒரு மாத காலத்திற்குள் உரிய நடவடிக்கை எடுப்பதோடு, அவ்விவரத்தை மனுதாரருக்கு அனுப்பி வைப்பதோடு, நிறைவேற்றுகை அறிக்கையினை 21/08/2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேலும், மனுதாரர் தெரிவிக்கையில், தனது பக்கத்துவீட்டுக்காரர் ஓர் அரசு ஊழியர் என்றும் அவர் மேற்சொன்னவாறான ஆக்கிரமிப்புகளை மேற்கொள்கிறார் என்றும் தெரிவித்தார். எனவே, இப்பொருண்மை குறித்து, வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் கோட்டம் அவர்கள் உண்மை நிலையினை அறியும் வகையிலான விசாரணையினை மேற்கொள்ள வேண்டுமென்று ஆணையம் கருதுகிறது. எனவே, வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் கோட்டம் அவர்களுக்கு மனுதாரரின் 13/07/2026 தேதியிட்ட குறை தீர் மனுவின் நகல் இவ்வாணையுடன் இணைத்து அனுப்பப்படுகிறது. வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் கோட்டம் அவர்கள், மனுதாரரின் மனுவின் மீது சட்டத்திற்குட்பட்டு உண்மை நிலையினை அறியும் வகையிலான விசாரணையினை நடத்துவதோடு, அவ்வறிக்கையின் மீது விதிமுறைகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கை எடுத்து, அவ்விவரங்களை மனுதாருக்கு அனுப்பி, அதன் நகலினை பிரதிநிதி வாயிலாக ஆணையத்தில் 21/08/2026 அன்று சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. வழக்கு விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 388/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
தாம்பரம் கோட்டம், தாம்பரம்
சென்னை-600 045

2.பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம்
(இ) சிட்லபாக்கம் - 600 064
தாம்பரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்..

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.R.ராஜு,
எண்.3/57, மெயின் லேன் தெரு
போலீஸ் கமிஷனர் காலனி
பொழிச்சலூர், சென்னை -600 074
Cell :85259 90563.

RG/Sr.PC